ஓம் சரவணஜோதியே நமோ நம

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1476

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

14.10.2023, சனிக்கிழமை

1. தசவாசல் தனித்துவம் தானுணர்ந்து
தக்கபடி தண்டாயுதன் என்னருளால்
நேசமுடன் திறவுகண்டு ஞானவாழ்வு
நிலவுலகில் தனிப்பெரும் ஞானியாக
2. ஆகவே அற்புதம் நடத்துகின்ற அரங்கனே
உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
உத்தமமாய் ஞான அறிவுரை ஆசி
உரைத்திடுவேன் சோபகிருது நங்கைத் திங்கள்
(சோபகிருது வருடம் புரட்டாசி மாதம் 27 ம் நாள், 14.10.2023, சனிக்கிழமை)
3. திங்களிலே அரங்கனுக்கு சக்தி கூடி
தெரிவிப்பேன் அற்புதங்கள் நிகழ்ந்துவர
சக்திமிகு அரங்கனுக்கு இந்த வாசி நாளிலும்
சாற்றிடுவேன் சகலயோகம் கிட்ட நேரும்
4. நேர்மைகொண்டு அரங்கன் நடத்துகின்ற
நீதிவழி சன்மார்க்கக் கொள்கையெல்லாம்
கொள்கையெல்லாம் உலகமெல்லாம் பரவி இனிதே
குரு அரங்கன் ஒருவனே கலியின் சிறந்த ஞானி
5. ஞானியென உலகோர் ஏற்று இனிதே
ஞானவாழ்வு கொண்டு அரங்கன் தர்மவழி
ஆற்றல்பட கலந்து தொடர்ந்து அனுதினமும்
அரங்கன் மேல் அளவிலா ஜெபதபம் செய்து
6. செய்துமே இந்த பேருலகில்
சித்திகளை உலகோர் இலகுவாய் அடைந்து
ஐயமற அரங்கன் விரும்புகின்ற
அகிலமெங்கும் ஞான ஆட்சி அமைக்கக்கூடும்

7. கூடவே ஆறுமுகன் யான் குறையின்றி
குருஅரங்கனுள் இருந்து இயக்க
நாடெங்கிலும் அரங்கன் தர்மம் வளர
ஞானஆட்சிக்காலம் உதயமாகக்கூடும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

**—சுபம்—**